வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி 20.08.2025 நேரம் மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் திரு. சி பி. ராதாகிருஷ்ணன், இன்று தமது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.
- பீகார் மாநில வாக்காளர் பட்டியல் விவகாரம் தொடர்பாக, இன்று நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, மக்களவை, மீண்டும், மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டது.
- ஏற்கனவே மக்களவையில் நிறைவேற்றப்பட்ட, ஐஐஎம்-உயர்கல்வி நிறுவனங்கள் திருத்த மசோதா, இன்று மாநிலங்களவையில், அமளிக்கு இடையிலேயே நிறைவேற்றப்பட்டது.
- உலக அளவிலான முதலீடுகளை புதுச்சேரிக்கு ஈர்க்கும் வகையிலான, 3 நாள் சர்வதேச வர்த்தக உச்சி மாநாடு, புதுச்சேரியில், வரும் 22ஆம் தேதி தொடங்க உள்ளது.

-------------------------

<u>*ராதாகிருஷ்ணன் வேட்புமனு 1 (18)*</u>

குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் திரு. சிபி. ராதாகிருஷ்ணன், இன்று தமது வேட்புமனுவை தாக்கல் செய்தார். தேர்தல் அதிகாரியான மாநிலங்களவை செயலரிடம் அவர் வேட்புமனு தாக்கல் செய்த போது, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள், திரு. அமித் ஷா, திரு. ராஜ்நாத் சிங், திரு. ஜே.பி நட்டா, திரு. கிரண் ரிஜிஜூ, மற்றும், ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த

திரு. பிரஃபுல் பட்டேல், லோக் ஜனசக்தி கட்சியின் திரு. சிராக் பாஸ்வான் உள்ளிட்டோர் உடன் இருந்தனர். வேட்புமனு தாக்கல் செய்யும் முன்பாக, திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற வளாகத்தில், மகாத்மா காந்தி உட்பட முக்கிய தலைவர்களின் சிலைகள் அடங்கிய பிரேரணா தலத்தில் மலரஞ்சலி செலுத்தினார். குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான இண்டியா கூட்டணி வேட்பாளர் திரு. சுதர்சன் ரெட்டி, நாளை வேட்புமனு தாக்கல் செய்வார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கு வேட்புமனு தாக்கல் செய்ய நாளை கடைசி நாளாகும். நாளை வரை தாக்கல் செய்யப்படும் மனுக்கள், நாளை மறுநாள் பரிசீலிக்கப்படும். ஏற்கப்பட்ட மனுக்களை திரும்பப் பெற, வரும் 25ஆம் தேதி கடைசி நாளாக இருக்கும். குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான

<u>ராதாகிருஷ்ணன் வேட்புமனு 2 (5)</u>

தேர்தல் அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறும். மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள், இத்தேர்தலில் வாக்களித்து, புதிய குடியரசுத் துணைத் தலைவரை தேர்ந்தெடுக்க உள்ளனர். கடந்த மாதம் குடியரசுத் துணைத் தலைவர் பதவியில் இருந்து திரு. ஜெக்தீப தன்கர் ராஜினாமா செய்ததை தொடர்ந்து, இத்தேர்தல் அவசியமாகி உள்ளது.

------------------------

<u>நாடாளுமன்றம் 1 (8)</u>

பீகார் மாநில வாக்காளர் பட்டியல் விவகாரம் தொடர்பாக, இன்று நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, மக்களவை மீண்டும், மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டது. எதிர்கட்சிகளின் எதிர்ப்பு, ஒத்தி வைப்புகளுக்கு இடையிலேயே, 130ஆவது அரசியல் சாசன திருத்த மசோதா, ஜம்மு-காஷ்மீர் மறுசீரமைப்பு மசோதா, யூனியன் பிரதேச அரசுகள் பற்றிய திருத்த மசோதா ஆகிய மசோதாக்கள் அவையில் தாக்கல் செய்யப்பட்டு, கூட்டு நாடாளுமன்றக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், ஆன்-லைன் கேமிங் ஒழுங்குமுறை மசோதாவை இன்று அமளிக்கு இடையிலேயே, மக்களவையில் தாக்கல் செய்தார். ஆன்-லைன் விளையாட்டுகளை ஊக்குவிக்கும் அதே வேளை, மக்கள் பணத்தை கொள்ளையடிக்கும் நோக்கிலான கேமிங் சேவைகள், விளம்பரங்கள், மற்றும், தொடர்புடைய பணப் பரிமாற்றங்களை தடை செய்ய, இம்மசோதாவில் வகை செய்யப் பட்டுள்ளது. விதி மீறலில் ஈடுபடுவோருக்கு, அதிகபட்சம் 3 ஆண்டு சிறை தண்டனை, மற்றும் 1 கோடி ரூபாய் அபராதம் விதிக்கவும், மீண்டும், மீண்டும் குற்றத்தில் ஈடுபட்டால், தண்டனையை அதிகரிக்கவும். மசோதாவில் விதிமுறைகள் இடம்பெற்றுள்ளன.

அசாம் மாநிலம் குவஹாத்தியில், ஐஐஎம்-உயர்கல்வி நிறுவனம் அமைக்கும் வகையில் ஏற்கனவே மக்களவையில் நிறைவேற்றப்பட்ட, ஐஐஎம் திருத்த மசோதா இன்று, மாநிலங்களவையிலும், அமளிக்கு இடையிலேயே நிறைவேற்றப்பட்டது. இதை தொடர்ந்து, மாநிலங்களவையின் இன்றைய அலுவல்கள் ஒத்தி வைக்கப்பட்டன. முன்னதாக, இம்மசோதா மீதான விவாதங்களுக்கு, மத்திய கல்வி



அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் பதில் அளிக்கையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, புதிய கல்வி நிலையங்களை அமைப்பதன் மூலம், மாணவர்களுக்கு கூடுதல் வாய்ப்புகளை வழங்க உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்தார். ஐஐஎம் உயர்கல்வி நிறுவனங்களுக்கு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் என்ற அந்தஸ்து வழங்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

-------------------------

மோடி-கட்டுரை (9)

தொலைத் தொடர்புத் துறையில், அடுத்தகட்ட நிலையை பற்றிக் கொள்ளுதல் என்ற தலைப்பில், மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு. ஜோதிராதித்யா சிந்தியா, தேசிய நாளேடு ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். அகன்ற அலைவரிசை, யுபிஐ, மற்றும், இதர டிஜிட்டல் சேவைகளை, மலிவான கட்டணத்தில் மக்களுக்கு வழங்குவதில், இந்திய எட்டி உள்ள முன்னேற்றங்களை, அமைச்சர் இக்கட்டுரையில் வெளிப்படுத்தி இருப்பதாகவும், இந்த வெற்றிக் கதைகள், சாத்தியமானது எப்படி என்பது சர்வதேச ஆய்வாகவே தற்போது மேம்பட்டு உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

-------------------------

டெல்லி-ராஜீவ் (8)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி பிறந்த நாளான இன்று புதுடெல்லியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து, ராஜீவ் காந்தி நினைவிடமான வீர் பூமியில், காங்கிரஸ் தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே, மற்றும், பிரியங்கா காந்தி உள்ளிட்ட தலைவர்கள் பலரும், மரியாதை செலுத்தினர். சென்னை சத்தியமூர்த்தி பவனில், ராஜீவ் காந்தியின் திருவுருவப் படத்திற்கும், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ் காந்தி நினைவிடத்திலும், காங்கிரஸ் கட்சியினர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

-------------------------

புதுச்சேரி மாநாடு 1 (5)

உலக அளவிலான முதலீடுகளை புதுச்சேரிக்கு ஈர்க்கும் வகையில், சர்வதேச வர்த்தக உச்சி மாநாடு, புதுச்சேரியில் வரும் 22ஆம் தேதி தொடங்கி, 3 நாட்களுக்கு நடைபெற உள்ளது. மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் இன்று புதுச்சேரியில் செய்தியாளரிடம் இதை தெரிவித்தார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்….

*புதுச்சேரி மாநாடு* 2 (11)

(வாய்ஸ்)

இந்திய வம்சாவளி மக்களுக்கான சர்வதேச அமைப்புடன் இணைந்து, சுற்றுலாத் துறை ஏற்பாடு செய்துள்ள இந்த உச்சி மாநாட்டை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் தொடக்கி வைக்க உள்ளனர். பழைய துறைமுகத்தில் உள்ள கண்காட்சி, மற்றும் வர்த்தக மையத்தில் நடைபெறும் இம்மாநாட்டில், 30க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, 600க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர், சர்வதேச அளவிலான 200க்கும் மேற்பட்ட வணிகத் தலைவர்கள், மற்றும், இந்திய தொழில் முனைவோர் சுமார் 300 பேர் பங்கேற்க உள்ளனர். 10க்கும் மேற்பட்ட ஸ்டால்களில், வணிகர்கள் தங்களின் தயாரிப்புகள் மற்றும் புதுமைகளை காட்சிப்படுத்த உள்ளதாகவும், அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் தெரிவித்துள்ளார்.

-------------------------

*புதுச்சேரி ராஜீவ்* 1 (16)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்த நாளான இன்று புதுச்சேரியில், ராஜீவ் காந்தி சதுக்கத்தில் உள்ள அன்னாரின் சிலைக்கு, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். செய்தி-விளம்பரத் துறை சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், துணை சபாநாயகர் திரு. ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சாய் சரவணன் குமார், திரு. ஏ.கே.டி ஆறுமுகம், திரு. கே.எஸ்.பி. ரமேஷ், திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, மற்றும், அதிகாரிகள் கலந்து கொண்டனர். இன்று ராஜீவ் காந்தி பிறந்த நாள், நல்லிணக்க நாளாகவும் கடைபிடிக்கப் படுவதை ஒட்டி, நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும், சத் பாவனா திவஸ் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இதே போல, காரைக்கால்-

ஏனாம் பகுதிகளிலும், செய்தி - விளம்பரத்துறை சார்பில், ராஜீவ் காந்தி பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி அரசின் தலைமை செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் தலைமையில், சத் பாவனா உறுதிமொழி ஏற்கப்பட்டது.

*புதுச்சேரி ராஜீவ்* 2 (5)

வைசியாள் வீதியில் உள்ள பிரதேச காங்கிரஸ் அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த ராஜீவ் காந்தியின் திருவுருவப் படத்திற்கு, முன்னாள் முதலமைச்சர் திரு. நாராயணசாமி தலைமையில் கட்சி நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து, இவர்கள் ஊர்வலமாக வந்து, ராஜீவ் காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

-------------------------

*நிர்மலா* (9)

ஜிஎஸ்டி கட்டமைப்பில் உத்தேசிக்கப் பட்டுள்ள சீர்திருத்தங்கள் குறித்து, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் இன்று புதுடெல்லியில், மாநில அமைச்சர்கள் அடங்கிய குழுவுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். வரிக் கட்டமைப்பை எளிமைப் படுத்துவதற்கான இந்த உத்தேசங்களின்படி, சரக்கு மற்றும் சேவை வரியில், 5 சதவிகதம், மற்றும் 15 சதவிகிதம் என, ஈரடுக்க வரிக் கட்டமைப்பு பரிந்துரைக்கப் பட்டுள்ளது. தற்போதுள்ள 12 மற்றும் 18 சதவிகித வரி அடுக்குகள் நீக்கப் படுவதால், மக்களுக்கு குறைந்த விலையில் சரக்குகள், மற்றும், சேவைகள் கிடைக்க ஏதுவாகும் என்றும், நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

-------------------------

*நிலக்கரி சுரங்கம்* (9)

நிலக்கரி சுரங்கங்களை, வர்த்தக ரீதியில் ஏலம் விடுவதற்கான 13ஆம் சுற்று நடைமுறைகளை, மத்திய அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி, புதுடெல்லியில் நாளை தொடக்கி வைக்கிறார். முழுமையாகவும், பகுதி அளவிலும் ஆராயப்பட்ட பல புதிய நிலக்கரி படிவுப் பகுதிகள், இந்நடைமுறைகளின் போது ஏலம் விடப்படும். நிலக்கரி துறையில் வர்த்தகம் புரிவதை எளிதாக்கி, அதிக முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்துடன், குறைந்த கட்டுப்பாடுகளுடன் கூடிய தாராளமய விதிமுறைகளின் கீழ், ஏல நடைமுறைகள் மேற்கொள்ளப்படும் என்றும், நிலக்கரித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

-------------------------

*வானிலை* (10)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றும், நாளையும், தமிழகத்தின் ஓரிரு இடங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 26ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும், எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில், 1 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-------------------------

ஹாக்கி (12)

பீகாரில், வரும் 29 முதல், அடுத்த மாதம் 7ஆம் தேதி வரை நடைபெற உள்ள, ஆடவர் ஆசியக் கோப்பை ஹாக்கிப் போட்டிகளுக்கான இந்திய அணி இன்று அறிவிக்கப் பட்டுள்ளது. ஹர்மன்ப்ரீத் சிங் தலைமையிலான இந்த அணியில், மொத்தம் 18 பேர் இடம்பெற்றுள்ளனர். பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்தில், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டிகளுக்கான தகுதிச் சுற்றாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ள ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டிகளில், ஜப்பான், சீனா, மற்றும் கஜகஸ்தான் அணிகளுடன், இந்திய அணி, A பிரிவில் இடம்பெற்றுள்ளது. இத்தொடரில் இந்திய அணியின் முதலாவது போட்டி, சீனாவிற்கு எதிராக, வரும் 29ஆம் தேதி நடைபெறும். இந்தியா-ஜப்பான் அணிகளுக்கு இடையிலான போட்டி, ஆகஸ்ட் 31ஆம் தேதியும், இந்தியா-கஜகஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி, செப்டம்பர் 1ஆம் தேதியும் நடைபெற உள்ளன.

-------------------------

*பாதுகாப்பு கருத்தரங்கம்* (13)

பாதுகாப்பு அமைச்சகம் சார்பில், நாட்டிலேயே முதல்முறையாக முப்படைகளின் பங்கேற்புடன் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, ஒருங்கிணைந்த போர் முறைகள் பற்றிய ரண சம்வாத் கருத்தரங்கு, மத்திய பிரதேஷ் மாநிலம் மஹூ நகரில் உள்ள ராணுவ போர்க் கல்லூரியில், வரும் 26-27 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. புதிய தொழில்நுட்பங்களால், எதிர்கால போர் முறைகளில் ஏற்படும் தாக்கங்கள், இத்தகைய தொழில்நுட்பங்களில் முப்படையினருக்கு பயிற்சி அளிக்கத் தேவையான சீர்திருத்தங்கள் ஆகிய 2 தலைப்புகளில், இக்கருத்தரங்கின் போது விவாதங்கள் இடம்பெற உள்ளன. முப்படை அதிகாரிகள், பாதுகாப்பு தொழில்நுட்பம் தொடர்பான தொழில் துறை பிரதிநிதிகள் உட்பட, சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரின் பங்கேற்புடன், இனி

**ஆண்டுதோறும் இத்தகைய கருத்தரங்கம் நடத்தப்படும் என்றும், பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

**--------------------------**